மாலை பதிப்பு

# சுபீட்சம்

SUPEEDSAM – EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

28.10.2022 வெள்ளிக்கிழமை

supeedsam.com supeedsam@gmail.com

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

# 13,000 மெட்ரிக் தொன் யூரியா உரம் இறக்குமதி

## கிழக்கு மாகாண விவசாயிகளுக்கு 7500 மெட்ரிக் தொன் உரம் வழங்க ஏற்பாடு



பெரும் போக நெற்செய்கைக்காக 13,000 மெட்ரிக் தொன் யூரியா உரம் நாட்டை வந்தடைந்துள்ளது. இந்த உரம் சீனாவில் இருந்து கொண்டு வரப்பட்டு கொழும்பு துறைமுகத்தில் இறக்கப்பட்டுள்ளது. பெரும் போகத்திற்கு தேவையான யூரியாவை கொள்வனவு செய்ய உலக வங்கி 105 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்கியுள்ளது. மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள கமநல சேவை நிலையங்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் 02


# எந்த நேரத்திலும் தேர்தலை எதிர்கொள்ள தயார் - மஹிந்த



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எந்த நேரத்திலும் தேர்தலை எதிர்கொள்ள தயாராக இருப்பதாக அக்கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆனமடுவயில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே முன்னாள் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதன்போது மேலும் தெரிவித்த அவர், "நமது அமைப்பு நாட்டைப் பின்னுக்கு இழுக்கும் அமைப்பு அல்ல. தீ மூட்டுவது எளிது, ஆனால் அதை அணைப்பது கடினம். தேர்தலுக்கு கூட எந்த நேரத்திலும் நாங்கள் தயாராக இருக்கிறோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நவம்பர் 03இல் கடன் வழங்குனர்களுக்கும், சர்வதேச நாணய நிதியத்துக்குமிடையில் பேச்சு



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

இலங்கையின் கடன் வழங்குனர்களுக்கும், சர்வதேச நாணய நிதியத்துக்குமிடையிலான அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை நவம்பர் 03 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதன்போது இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் 02

# இந்திய பல்கலைக்கழகத்தில் பட்டம் முடித்தவர்களையும் அரச சேவையில் உள்வாங்க தீர்மானம்

பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்தியப் பல்கலைக் கழகங்களின் பட்டதாரிகளையும் பட்டதாரி நியமனங்களில் உள்வாங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக நேற்று (27) பிரதமர் தினேஸ் குணவர்த்தன மற்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜெயந்த ஆகியோருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த கால யுத்த அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவில் தங்கியிருந்த காலப் பகுதியில், இந்தியப் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்று பட்டதாரிகளானவர்கள், யுத்தம் நிறைவடைந்த பின்னர் தங்களின் சொந்த 02

# நவம்பரில் சாதாரணதர பரீட்சை பெறுபேறு

2021 ஆம் ஆண்டுக்கான சாதாரணதர பரீட்சை பெறுபேறுகள் நவம்பர் மாத இறுதியில் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்தார். 407,129 பாடசாலை விண்ணப்பதாரர்கள் மற்றும் 110,367 தனியார் விண்ணப்பதாரர்கள் உட்பட மொத்தம் 517,496 விண்ணப்பதாரர்கள் 2021 சாதாரணதர பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

# உமாச்சந்திரா பிரகாஷ் பிணையில் விடுதலை



ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர் உமாச்சந்திரா பிரகாஷ் கைது செய்யப்பட்டு, கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்து, பிணையில் விடுக்கப்பட்டுள்ளார். நீதிமன்றத்தில் முன்னிலையாகிய 02

# 50கிலோ உரம் 10ஆயிரம் ரூபாய்

இறக்குமதி செய்யப்பட்டுள்ள 50 கிலோ கிராம் யூரியா உர மூடை ஒன்றை 10 ஆயிரம் ரூபாவுக்கு நெல் விவசாயிகளுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஜனாதிபதி ஊடக பிரிவு இதனை தெரிவித்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக பெரும் போகத்திற்கான தேவையை 02

# கோதுமை மாவின் விலை சடுதியாக குறைவு



ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் மொத்த விற்பனை விலை 250 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் தற்போதும் புறக்கோட்டையில் கோதுமை ஒரு கிலோகிராம் 250 ரூபா முதல் 260 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக புறக்கோட்டை அத்தியாவசிய உணவு பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

# முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புக்காக உயரடுக்கு பிரிவில் 226 பேர்

## தலதா அத்துகோரள



முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பிற்காக 226 பேர் உயரடுக்கு பாதுகாப்பு பிரிவில் பணியமர்த்தப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள தெரிவித்தார். கொழும்பில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். எலைட் பாதுகாப்பு பிரிவில் சுமார் 6,000 பொலிஸ் அதிகாரிகள் உள்ளனர் என்றும் இந்த 6000 பேரில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் 02




# பாணுக்கும் விலைச்சூத்திரம்

வர்த்தகர்கள் தன்னிச்சையாக பாணின் விலையை அதிகரிப்பது தொடர்பில் விலை சூத்திரம் ஒன்றை அறிமுகப்படுத்துமாறு நிறை மற்றும் அளவீட்டு பரிசோதகர்களின் தொழிற்சங்கம், அரசாங்கத்திடம் கோரியுள்ளது. உலக சந்தையில் நிலவும் கோதுமையின் விலை, தேசிய சந்தையில் நிலவும் கோதுமையின் விலை மற்றும் உற்பத்தி செலவீனம் ஆகியனவற்றை கருத்தில் கொண்டு விலை சூத்திரத்தை உருவாக்குமாறு அந்த சங்கம் கோரியுள்ளது. இந்த நிலையில், நிறை மற்றும் அளவீட்டு பரிசோதகர்களின் தொழிற்சங்கம் முன்வைத்துள்ள கோரிக்கையானது காலத்திற்கு ஏற்ற கோரிக்கை என நுகர்வோர் சேவை அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி சாந்த கிரியெல்ல தெரிவித்தார்.

# நாட்டின் முதல் பெண்மணி யாழ்ப்பாணத்துக்கு விஜயம்



நாட்டின் முதல் பெண்மணியும், களனிப் பல்கலைக்கழக ஆங்கிலத் துறையின் சிரேஸ்ர பேராசிரியரும், பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தில் அனுபவம் வாய்ந்த பெண்ணியவாதியுமான மைத்திரீ விக்கிரமசிங்க இன்றைய தினம் (வெள்ளிக்கிழமை) யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார். 02

## நவம்பர் 03இல் கடன் வழங்குனர்களுக்கும்,

விரிவாக ஆராயப்படவுள்ளது. தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் மூவரடங்கிய குழுவுக்குமிடையே விசேட சந்திப்பொன்று நேற்று (27) பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது தனது பதவிக்காலம் முடிந்து வெளியேறவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி வுரடியபரள குநசனைாயரெளநவலயறயஎ மற்றும் புதிதாக நியமனம் பெற்றுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி திருமதி. ளுயசறயவ துயாயஎ ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். இலங்கையின் கடன் மறுசீரமைப்பு மற்றும் கடன் வழங்குனர்களின் மாநாடு என்பன தொடர்பிலும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் கவனத்துக்கு கொண்டுவரப்படுவதுடன் இது தொடர்பில் அவரது கருத்துக்களை சர்வதேச நாணய நிதியத்துக்கு தெரியப்படுத்துவதாகவும் சாகல ரத்நாயக்க இந்தக் குழுவிடம் உறுதியளித்தார். பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ் சமரதுங்கவும் இச்சந்திப்பில் கலந்து கொண்டார்.

## இந்திய பல்கலைக்கழகத்தில் பட்டம் முடித்தவர்களையும் அரச சேவையில் உள்வாங்க தீர்மானம்

இடங்களுக்கு திரும்பியுள்ளனர். அவ்வாறானவர்கள், அண்மைய காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அரச சேவைக்கான பட்டதாரிகள் ஆட்சேர்ப்புக்களின் போது, வெளிநாட்டு பட்டதாரிகள் என்ற அடிப்படையில் நிராகரிக்கப்பட்டிருந்தனர்.

இதுதொடர்பாக பிரதமர் மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோருடன் பிரஸ்தாபித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பட்டதாரிகள் நியமனத்தின் போது, வெளிநாட்டு பட்டதாரிகள் என்ற காரணத்தினால் பாதிக்கப்பட்ட குறித்த பட்டதாரிகளும் உள்வாங்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுத்தினார். இந்நிலையில், இலங்கை பல்கலைக்கழக மானியங்களினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரிகளை அரச சேவையில் உள்ளீர்ப்பதற்கு பிரதமர் மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோரினால் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உமாச்சந்திரா பிரகாஷ் பிணையில் விடுதலை

நிலையில், இன்று கைது செய்யப்பட்டு, 2 லட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீர பிணையின் கீழ் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். கோட்டாய ராஜபக்ஸ, ஜனாதிபதியாக பதவி வகித்த காலப் பகுதியில், ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்திய குற்றச்சாட்டின் கீழ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர, உமாச்சந்திரா பிரகாஷ் உள்ளிட்ட 11 பேர் அப்போது கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள், அந்தசந்தர்ப்பத்தில் கோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டதை அடுத்து, அவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தார்கள். இவ்வாறு குற்றஞ்சுமத்தப்பட்டவர்கள் மீது தனித்தனியே வழக்கு பதிவு செய்து, நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான், கரையோர பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார். இந்த நிலையில், பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்து, பலவந்தமாக காயங்கள் ஏற்படுத்தியமை தொடர்பில் உமாச்சந்திரா பிரகாஷ் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. உமாச்சந்திரா பிரகாஷை, இன்றைய தினம் (ஒக்.28) கோட்டை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு, பொலிஸார் நேற்றைய தினம் (ஒக்.27) அறிவித்தல் கொடுத்திருந்தனர். பொலிஸாரின் அழைப்புக்கு அமைய, நீதிமன்றில் இன்றைய தினம் (ஒக்.28) உமாச்சந்திரா பிரகாஷ் முன்னிலையாகியிருந்தார். இந்த நிலையில், கரையோர பொலிஸாரினால் உமாச்சந்திரா பிரகாஷ் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்து, அவரை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. இந்த வழக்கு மீதான விசாரணைகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.




## 50கிலோ உரம் 10ஆயிரம் ரூபாய்

பூர்த்தி செய்ய போதியளவு கையிருப்பு உள்ளதாக விவசாய அமைச்சர் உறுதி செய்துள்ளதாக ஜனாதிபதி ஊடகபிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புக்காக உயரடுக்கு

அவர் தெரிவித்துள்ளார். இந்த நாட்டில் பல விடயங்களுக்கு பொறுப்பேற்க வேண்டிய முன்னாள் ஜனாதிபதிக்கு உயரடுக்கு பாதுகாப்பு பிரிவின் பொலிஸ் திணைக்களத்தில் இருந்து 226 பேர் பாதுகாப்பில் உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவருக்கு இராணுவம் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒருபுறம், 4000 பேர் நோய்வாய்ப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் மா அதிபர் தெரிவிக்கையில், மறுபுறம், 16,000 பேர் ஓய்வு பெறுவதாக கூறப்படுகிறது. இந்த நிலையில், இந்த 4,000 பேருக்கு சேவை நேரம் வழங்க உரிமை உண்டு என தான் எண்ணுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அவர்கள் நோய்வாய்ப்பட்டார்களா, அல்லது பொலிஸில் பணியமர்த்தப்பட்டபோது ஏதேனும் சிக்கல் ஏற்பட்டதா, பொலிஸ் நடவடிக்கையின் போது அவர்கள் ஊனமுற்றார்களா, பொலிஸ்க்கு வந்ததும் மன அழுத்தம் அதிகரித்து அவர்களுக்கு நீரிழிவு நோய் வந்ததா என்று தனக்குத் தெரியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறிருப்பினும் இந்த 4,000 பேருக்கு சேவை செய்ய வாய்ப்பு கொடுக்குமாறும் குறைந்தபட்சம் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் பணியாற்றுவதற்கான உரிமையை அவர்களுக்கு வழங்குங்கள் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## நாட்டின் முதல் பெண்மணி யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் "பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தின் ஊடாகப் புதிய இயல்பு நிலையில் நிலைபேறான அபிவிருத்தியை அடைதல்" என்ற தலைப்பிலான ஆய்வு மாநாட்டில் கலந்து கொண்டு முதன்மை உரை ஆற்றுவதற்காகவே அவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 13,000 மெட்ரிக் தொன் யூரியா உரம் இறக்குமதி

நெற்செய்கைக்கான முழுத் தேவையையும் ஒரே தடவையில் பெற்றுக்கொள்ளும் வகையில் முதலாவது யூரியாவை விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பெரும் போக நெற்செய்கை இன்னும் ஆரம்பிக்கப்படாவிட்டாலும் விதை நெல் விதைத்த 14 நாட்களுக்குள் அனைத்து விவசாய சேவை நிலையங்களுக்கும் முதல் உரம் இடுவதற்கு போதுமான இருப்புக்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது விலைமனுக்கோரலுக்கு அமைய 120,000 மெட்ரிக் தொன் உரத்தை ஏற்றிய இரண்டாவது கப்பல் நவம்பர் கடைசி வாரத்தில் நாட்டை வந்தடையவுள்ளது. மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கு அமைச்சினால் 7500 மெட்ரிக் தொன் உரம்வழங்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். ஏனைய மாவட்டங்களுக்கு முதல் தொகுதிக்கு தேவையான யூரியாவை ஏற்கனவே விநியோகித்துள்ளோம். அடுத்த மாதம் கடைசி வாரத்திற்குள் இரண்டு வகையான உரங்களையும் முழுமையாக வழங்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். உலக சந்தையில் யூரியாவின் விலை அதிகரித்தாலும், ஒரு மூடை ரூபா 10,000 வழங்குகின்றோம். எனவே, இந்த பெரும் போகத்தில் விவசாயிகள் எவ்வித தயக்கமும் இன்றி விவசாயம் செய்ய வேண்டும் என அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.






# அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014

**அருந்ததி**

இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**22312 | வே | 1985**
யாழ்நகர் | இந்து | MSc
Software Engineer
சதயம் (கும்பம்) | USA
174 செ.மீ | செவ்: 12

**22888 | வே | 1995**
பருத்தித்துறை | இந்து
BSc | IT Engineer
திருவாதிரை (மிதுனம்)
183 செ.மீ | செவ்: 01

**25018 | வே | 1988**
வல்வெட்டித்துறை | இந்து | BD
Cutomer Service Officer
சதயம் (கும்பம்) | UK
170 செ.மீ | செவ்: 08

**22498 | வே | 1992**
காரைநகர் | இந்து | BCom,
AAT | Asst. Accountant
திருவோணம் (மகரம்)
175 செ.மீ | செவ்: 08

**22510 | வே | 1990**
நெல்லியடி | இந்து | BBA,
CIMA | Audit Manager
விசாகம் (விருச்சிகம்)
167 செ.மீ | UAE

**22462 | வே | 1992**
வளலை | இந்து | BD,
HND | Civil Engineer
திருவோணம் (மகரம்)
173 செ.மீ

**22921 | வே | 1995**
கொக்குவில் | இந்து | BSc
Civil Engineer
திருவோணம் (மகரம்)
172 செ.மீ

**25015 | வே | 1987**
நயினாதீவு | இந்து | BD
Supervisor | கனடா
சுவாதி (துலாம்)
167 செ.மீ

**22939 | ந | 1995**
அச்சுவேலி | இந்து | A/L
Restaurant Staff
பூராடம் (தனுசு) | France
168 செ.மீ

**22131 | வே | 1990**
கரனைவாய் | இந்து | BSc
MSc | Civil Engineer
மகம் (சிம்மம்) | Singapore
168 செ.மீ

**22549 | வே | 1988**
காரைநகர் | இந்து | B.Eng
Mechanical Engineer
கார்த்திகை (ரிஷபம்)
165 செ.மீ

**25000 | வே | 1991**
கோப்பாய் | இந்து | Master
Degree | Banker
சித்திரை (கன்னி)
180 செ.மீ | சு.செவ்: 06

**22230 | வே | 1988**
கொக்குவில் | இந்து
Diploma | Receptionist
சுவாதி (துலாம்) | France
167 செ.மீ | செவ்: 02

**22224 | வே | 1988**
திருநெல்வேலி | இந்து | BSc
Exe.Mechanical Engineer
கேட்டை (விருச்சிகம்)
170 செ.மீ | Singapore

**22318 | வே | 1991**
நல்லூர் | இந்து | A/L
Management Assistant
சித்திரை (துலாம்) | Divorced
160 செ.மீ | செவ்: 12

**22179 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | HNDM
Reagional Manager
உத்தராடம் (தனுசு)
192 செ.மீ | செவ்: 04

**22095 | வே | 1986**
இணுவில் | இந்து | A/L
Chef | France
சுவாதி (துலாம்)
183 செ.மீ

**22068 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | BSc
Software Engineer
மகம் (சிம்மம்)
180 செ.மீ | செவ்: 04

**22993 | வே | 1995**
கொக்குவில் | இந்து
BSc | Engineer
கார்த்திகை (ரிஷபம்)
177 செ.மீ

**22146 | வே | 1993**
வேலணை | இந்து
BSc | Lecturer
பூரட்டாதி (கும்பம்)
165 செ.மீ | செவ்: 04

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**23071 | வே | 1985**
மானிப்பாய் | இந்து
MBBS | Doctor
அஸ்வினி (மேடம்)
164 செ.மீ | சு.செவ்: 05

**24943 | வே | 1993**
தெல்லிப்பழை | இந்து
Diploma | Teacher
சதயம் (கும்பம்)
160 செ.மீ | சு.செவ்: 11

**22609 | கோ | 1996**
பருத்தித்துறை | இந்து
Diploma | Teacher
புனர்பூசம் (மிதுனம்)
167 செ.மீ | செவ்: 12

**25006 | இ.வே | 1993**
அளவெட்டி | இந்து
BSc | Nurse | UK
உத்தரட்டாதி (மீனம்)
158 செ.மீ

**22495 | வே | 1996**
மானிப்பாய் | இந்து | A/L
Accountant
உத்தரம் (கன்னி)
165 செ.மீ | செவ்: 08

**22792 | வே | 1993**
அச்சுவேலி | இந்து | BSc
Demonstrator
கேட்டை (விருச்சிகம்)
160 செ.மீ | செவ்: 02

**23158 | வே | 1995**
வட்டுக்கோட்டை | இந்து
BBS Congras | சுவிஸ்
விசாகம் (துலாம்)
167 செ.மீ | சு.செவ்: 03

**22789 | வே | 1994**
கொக்குவில் | இந்து | BSc
Operation Analyst
பூசம் (கடகம்)
159 செ.மீ

**22513 | வே | 1994**
மானிப்பாய் | இந்து | BD
Marketing Executive
திருவாதிரை (மிதுனம்)
170 செ.மீ

**23086 | வே | 1996**
சண்டிலிப்பாய் | இந்து | BBA,
ACCA | Lecturer
விசாகம் (துலாம்)
170 செ.மீ

**22537 | வே | 1995**
கொக்குவில் | இந்து | BSc
Software Engineer
ரேவதி (மீனம்)
165 செ.மீ

**22474 | வே | 1997**
வவுனியா | இந்து
BSc | QA Engineer
பரணி (மேடம்)
167 செ.மீ | செவ்: 02

**25012 | வே | 1990**
நல்லூர் | இந்து | BSc
Finance Officer
திருவாதிரை (மிதுனம்)
158 செ.மீ | செவ்: 07

**22696 | வே | 1996**
சித்தங்கேணி | இந்து | BSc
Software Engineer
திருவோணம் (மகரம்)
176 செ.மீ | சு.செவ்: 05

**22441 | வே | 1996**
திருநெல்வேலி | இந்து | HRM
PG Diploma (Final Year)
Staff Assistant | சித்திரை
(கன்னி) | 157 செ.மீ

**22158 | வே | 1993**
அல்வை | இந்து
MBBS | Doctor
திருவாதிரை (மிதுனம்)
163 செ.மீ

**22891 | வே | 1993**
ஆனைக்கோட்டை | இந்து
Diploma | Bank
Assistant | மூலம் (தனுசு)
159 செ.மீ

**22936 | வே | 1993**
அளவெட்டி | இந்து
BBM | Teacher
மகம் (சிம்மம்)
151 செ.மீ | செவ்: 07

**22870 | வே | 1993**
ஏழாலை | இந்து | BSc,
PhD | Researcher
மூலம் (தனுசு) | Australia
157 செ.மீ | சு.செவ்: 10

**22660 | கோ | 1994**
அச்சுவேலி | இந்து
BFA | Job Seeker
மூலம் (தனுசு)
159 செ.மீ | சு.செவ்: 12

# மீலாதுன் நபி தின விழாவும், அஹதிய்யா பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பும்

**(அ . அச்சுதன்)**

திருகோணமலைக் கல்வி வலயத்தின் கீழ் முஹம்மதியா முஸ்லிம் வித்தியாலயத்தின் அதிபர் ஆ.யு. ஸலா/ஹதீன் அவர்களது தலைமையில் 2022 ஆம் வருடத்திற்கான மீலாதுன் நபி தின விழாவும், மாவட்ட மட்ட அஹதிய்யா பாடசாலைகளுக்கு இடையேயான கலாசாரப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களைக் கௌரவித்து வெற்றிச் சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் நேற்று (27.10.2022 ) குறித்த பாடசாலையில் இடம் பெற்றது. மேற்படி நிகழ்விற்கு திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் பிரதம அதிதியாகவும் மற்றும் குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் A.P. முபாறக் அவர்கள் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டனர்.

குறித்த விழாவானது அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள், பெற்றோர் ஆகியோரின் ஒத்துழைப்புடனும் இவர்களின் உயரிய அர்ப்பணிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டு, சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கஷ்ட பிரதேச மாணவர்களுக்கு உதவும் கல்முனை ரோட்டரி கழகம்



**(வி.ரி. சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்ட கஷ்டப்பிரதேச தேவையான மாணவர்களுக்கு கல்முனை ரோட்டரி கழகம் கற்றல் உபகரணங்களை வழங்கி உதவிவருகின்றது. கழகத்தின் புதிய தலைவர் றோட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன் தலைமையில் இவ் உதவித் திட்டம் முன்னெடுக்கபட்டு வருகிறது.

கஷ்டப்பிரதேச மாணவர்களுக்கு அப்பியாசக்கொப்பிகள் வழங்கும் நிகழ்வின் 4ஆம் கட்டமாக திருக்கோவில் வலயத்துக்கு உட்பட்ட நான்கு பின்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டன. மண்டான அ.த.க. பாடசாலை, பாலக்காடு பால விநாயகர் வித்தியாலயம், விநாயகபுரம், தம்பிலுவில் கனகரத்தினம் மகாவித்யாலய மாணவர்களுக்காக 375,000 செலவில் இவை வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் கல்முனை ரோட்டரி கழகத்தலைவர் றோட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன் உள்ளிட்ட கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதற்கான நிதியுதவி அவுஸ்ரேலிய கன்பேரா வெஸ்டர்ன் கிறிக் ரொட்டரிக் கழகத்தினால் 4ம் கட்டமாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# வெற்றிக்கான மென்திறன்கள் சுய ஊக்குவிப்பு அமர்வு



**(ரக்ஸனா)**

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்புக் கல்வி வலயத்திற்குபட்பட்ட களுதாவளை மகாவித்தியாலயம் தேசிய பாடசாலையின் உயர் வகுப்பு மாணவர்களுக்கு "வெற்றிக்கான மென்திறன்கள் சுய ஊக்குவிப்பு செயலமர்வு" ஒன்று வெள்ளிக்கிழமை(28) பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. வித்தியாலய அதிபர் க.சத்தியமோகன் தலைமையில் பாடசாலையின் பழையமாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் கே.ரி.பி. எனும் நிபுணத்துவ ஆலோசனை மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பிரபல வளவாளர் துரைராஜா பிரஷாந்தன் அவர்கள் இதன்போது கலந்து கொண்டு மாணவர்கள் தற்காலத்தில் எதிர் கொள்ளும் சவால்கள், வெற்றிக்கான வழிவகைகள், சவால்களை எதிர்கொள்ளும் வழிவகைகள், தடைகளைக் கடந்து கற்றல், தடைகளைத் தாண்டும் நுட்பங்கள், மற்றும் தலைமைத்துவம், உள்ளிட்ட பல விடையங்கள் தொடர்பில் இதன்போது மாணவர்களுக்கு விளக்கமளித்தார்.

இதன்போது முன்னாள் வலயக்கல்வில் பணிப்பாளரும் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய தலைவருமான கே.பாஸ்கரன், மற்றும் பாடசாலையின் பழைய மாணவர் சங்கச் செயலாளர் ஆர்.ஞானசேகரன், மற்றும் அதன் பிரதிநிதிகள், உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர். கே.ரி.பி. எனும் நிபுணத்துவ ஆலோசனை மற்றும் பயிற்சி நிறுவனமானது, இலங்கை மத்திய வங்கி உட்பட மற்றும்பல முன்னணி நிறுவனங்களுக்கும், திணைக்களங்களுக்கும், தொழில் வாண்மை தொடர்பான பயிற்சிகளை வழங்கி வருகின்றது. இந்நிலையியில் இவ்வமைப்பு இன்றயத்தினம் இலவசமாக மாணவர்களுக்கு இப்பயிற்சியை வழங்கியிருந்தமை விசேட அம்சமாகும்.

# கல்முனை ஆதார வைத்தியசாலையில் நவபோஷா விநியோகம்

**( வி.ரி சகாதேவராஜா)**

ஐக்கிய ராஜ்ஜியத்தில் அமைந்துள்ள மட்டக்களப்பு நலிவுற்றோர் அபிவிருத்தி சங்கம் மற்றும் மட்டக்களப்பு மருத்துவமனைகளின் நண்பர்கள் சங்கம் என்பவற்றின் நிதிப்பங்களிப்பில் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் 5 வயதுக்குட்பட்ட ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு 'நவபோச' சத்துமா வழங்கும் நிகழ்வு இன்று(28.10.2022) வெள்ளிக்கிழமை கல்முனை ஆதார வைத்தியசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ் வைபவம் கல்முனை ஆதாரவைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா.முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கல்முனை ஆதாரவைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் இரா. முரளீஸ்வரன், கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ந.ரமேஸ். உதவி வைத்திய அத்தியட்சகர் டாக்டர்ஜெ.மதன், குழந்தை நல மருத்துவ நிபுணர் டாக்டர் பிறேமினி மற்றும் நிதிப்பங்களிப்பு வழங்கிய அமைப்புக்களின் பிரதிநிதி கிறிஸ்ரி என்பவர்கள் கலந்து கொண்டனர்.

கல்முனை பிராந்திய தாய்மார்களுக்கான சத்துமா பொதிகள் வழங்கிவைக்கப்பட்டது. இந் நிகழ்வில் வைத்திய அத்தியட்சகர் இரா.முரளீஸ்வரன் உரையாற்றுகையில். இவ்உதவியை வழங்கிய



அமைப்பிற்கு நன்றி தெரிவித்ததோடு கொரொனா காலங்களிலும் இந்த அமைப்பு பல உதவிகளை வழங்கியதை நினைவு கூர்ந்தார்ந்தார்.

# ஊடகவியலாளர்களுக்கு செயலமர்வு



**த.சுபேசன்**

சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் வியாழக்கிழமை(20) யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களுக்கான ஒருநாள் பயிற்சிநெறி இடம்பெற்றது. தொடர்பகம் அலுவலக மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த பயிற்சிநெறியில் சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி அம்பிகா ஸ்ரீதரன், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் ஆகியோர் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிநெறியை வழங்கியிருந்தனர். இதன்போது மனித உரிமைகள் பற்றிய அறிமுகம் ,இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகளுக்கான ஏற்பாடுகள், முறைப்பாட்டு பொறிமுறைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு தெளிவூட்டப்பட்டது.

# கல்முனை வலய பெறுபேற்றை அதிகரிகரிக்க நவம்பர் பதினைந்தில் பொதுப்பரீட்சை

**நற்பிட்டிமுனை நிருபர்**

2023 இல் இடம்பெறவுள்ள கல்விப் பொதுத்தராதரப்பத்திர சாதாரணதரப் பரீட்சையை முன்னிட்டு நவம்பர் மாதம்15 ஆந்திகதி மாதிரி பரீட்சையொன்று இடம்பெறவுள்ளது. கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் இன்று வலயக்கல்விப்பணிப்பாளர். எம்.எஸ்.ஏ.சஹ்துல் நஜீம் தலைமையில் இடம்பெற்ற.அபிவிருத்திக்கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வலய அதிபர்கள் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் கோட்டக் கல்விப்பணிப்பாளர்கள்ஆசிரிய ஆலோசகர்கள் பாட இணைப்பாளர்கள் செயற்றிட்ட உத்தியோகத்தர்கள் வளவாளர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். மாணவர்பெறும் புள்ளிகளை இனங்கண்டு அடைவுமட்டத்தை அதிகரிக்க தேவையான நடவடிக்கை இதன்மூலம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இதற்கான தனியான ஆய்வுப் பிரிவொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார். குறிப்பாக நூனசித்தி பெறும் மாணவர்களுக்கு இது வரப்பிரசாதமாக அமையவுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். முக்கிய பாடங்களுக்கு மாத்திரமின்றி தொகுதிப்பாடங்கள் பலவற்றுக்கும் மாதிரிப்பரீட்சை இடம்பெறவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# தம்பட்டை மகாவித்தியாலய பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு



**நூருல் /ஹுதா உமர்**

இணைந்த கரங்கள் அமைப்பினால் திருக்கோவில் கல்வி வலயத்தின் கமுஃதிகோஃ தம்பட்டை மகா வித்தியாலய பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வானது பாடசாலையின் பிரதி அதிபர் சிவயானம் அகிலன் தலைமையில் இடம்பெற்றது. மாணவர்களுக்கான பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்விற்கு பாடசாலையின் ஆசிரியர்களான யோ. உமேஸ்வரன், சாத்விகன், குமரன் மேலும் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள்,இணைந்த கரங்கள் இணைப்பாளர்களான திரு.லோ.கஜரூபன், மற்றும் திரு. எஸ்.காந்தன் ஆகியோரினால் தரம் 01தொடக்கம் 11 வரை கல்விகற்கும் 30 மாணவ மாணவிகளுக்கு பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தாந்தாமலையில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை



கொக்கட்டிச்சோலை காவல் பிரிவிற்குட்பட்ட தாந்தாமலைப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் உற்பத்தி செய்யப்பட்ட கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை செய்யப்பட்டு, அங்கிருந்த 9வரல்களில் காணப்பட்ட கசிப்பும் அழிக்கப்பட்டுள்ளன. கிராம உத்தியோகத்தர்கள் இணைந்து இந்நிலையத்தினை முற்றிகையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# மன்னாரில் கடல் சுற்றாடல் பாதுகாப்பை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் உண்டு

## அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமெல்




( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் சுமார் பதினொராயிரத்துக்கு மேற்பட்ட மீனவ குடும்பங்கள் கடலை நம்பியே தங்கள் வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்றன ஆகவே நாம் எமது பகுதி கடல் சுற்றாடல் பாதுகாப்பை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் உண்டு என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் இவ்வாற தெரிவித்தார். கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையினால் எண்ணெய் கசிவு முன் ஆய்த்த தொடர்பான பயிற்சி பாசறை மன்னாரில் ஆஹாஸ் ஹொட்டலில் வியாழக்கிழமை (27.10.2022) மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தொடர்ந்து உரையாற்றுகையில்

கடல் சுற்றாடல் பாதுகாப்பை முன்னெடுக்கும் கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபைக்கும் இதற்கான திட்டத்தை மேம்படுத்தும் முகமாக உதவிக் கரம் நீட்டியுள்ள உலக உணவு திட்ட அமைப்புக்கும் நாம் நன்றி கூறுகின்றோம். எமது மன்னார் மாவட்டத்தில் சுமார் 11 ஆயிரம் மீனவ குடும்பங்கள் மீன்பிடியை நம்பியே வாழந்து கொண்டு இருக்கின்றார்கள்.

அத்துடன் இவ் மாவட்டத்தில் அதிகமான குடும்பங்கள் நேரடியாக மீன்பிடியில் ஈடுபடாத போதும் இவ் தொழிலை நம்பியே வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆகவே இப் பகுதியில் கடல் சுற்றாடல் பாதுகாப்பை மிக அவசியமாக கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் உண்டு.

நாங்கள் கண்ட அனுபவம் அண்மையில் நீர்கொழும்பில் கடலில் ஏற்பட்ட ஒரு அனர்த்தம் காரணமாக எங்கள் மாவட்டத்தின் மீனவர்கள் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருந்தனர். குறிப்பாக வங்காலையிலிருந்து அரிப்பு சிலாவத்துறை கடல் கடற்கரைப் பகுதிகள் மிக அச்சநிலையில் காணப்பட்டன. நான் தனிப்பட்ட முறையில் இவ் பகுதிக்கு அந்நேரம் சென்று கவனத்துக்கு எடுத்த நிலையில் இது தொடர்பாக கடற்படை அதிகாரிகள் மற்றும் கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையுடன் தொடர்புகள் எற்படுத்தி இதன் நிலைமையை கவனத்துக்கு கொண்டு சென்றேன்.

இச் சம்பவம் எங்களுக்கு ஒரு எதிர்பார்ப்பு அற்ற நிலைமையாகவே காணப்பட்டபோதும் சில தினங்கள் மக்கள் மீன்களை உண்ணலாமா உண்ணக்கூடாதா என்ற நிலையில் காணப்பட்டாலும் அச்சநிலை அந்நேரம் காணப்பட்டது. ஆகவே இன்றைய இவ் பாசறை எங்களுக்கு ஒரு நன்மை பயக்கும் செயல்பாடாக இருப்பதை நாங்கள் உணர வேண்டும்.

எதிர்காலத்தில் திடீரென இவ்வாறு ஒரு சம்பவம் எங்களுக்கு ஏற்படுமாகில் தற்பொழுது இவ் பாசறையின் மூலம் என்ன செய்ய வேண்டும் யாருடன் தொடர்பு கொள்ள வேண்டும் என பல விடயங்களை நாங்கள் தெரிந்து கொள்ள ஏதுவாகியுள்ளது. அத்துடன் இந்த கடல் சுற்றாடல் பாதுகாப்புக்கு எங்கள் கடமைகள் என்ன என்பதையும் நாங்கள் தெரிந்து கொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது.

ஆகவே இங்கு ஒன்றுகூடியுள்ள அதிகாரிகளாகிய நீங்கள் இங்கு தெரிவிக்கும் கருத்துக்களை உள்வாங்கி கடல் சுற்றாடல் பாதுகாப்பு இவ் திட்டத்துக்கு உங்கள் ஒத்துழைப்பை வழங்குவீர்கள் என நம்புகின்றேன். இது எமது மாவட்த்துக்கு மட்டுமல்ல எமது நாட்டின் அனைத்து கடல் சுற்றாடல் பாதுகாப்பாக அமைய வேண்டிய அவசியமாக உள்ளது. எமது மீனவர்கள் கடலுக்கு செல்லும்போது பலதரப்பட்ட பொருட்களை கண்டெடுத்து என்ன பொருள் என்ன மாத்திரைகள் என மற்றவர்களிடம் கொடுத்து ஆராயும் தன்மை இன்றும் நிலவி வருவதால் நாம் தொடர்ந்து இவ்வாறான கடல் சுற்றாடலை பாதுகாக்க வேண்டி இருக்கின்றது.

ஆகவே இங்கு இது தொடர்பாக விளக்கம் தருவார்கள் நாம் இவற்றை கவனத்தில் எடுத்து செயல்பட முனைவோம் என இவ்வாறு தெரிவித்தார்.

# மலையக மரக்கறி உற்பத்தியாளர்களுக்கு சலுகை வழங்க வேண்டும்

**தலவாக்கலை பி.கேதீஸ்**



அரசாங்கம் நெல் உற்பத்தியாளர்களுக்கு வழங்கும் சலுகைகள் மற்றும் நிவாரணங்கள் மலையக மரக்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும் என மலையக மக்கள்முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர். இராஜாராம் கோரிக்கை விடுத்துள்ளார். அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு மூட்டை யூரியா 10 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் மலையகத்தில் மரக்கறி உற்பத்தி செய்யும் விவாசாயிகளுக்கு 29 ஆயிரம் ரூபாவிற்கு ஒரு மூட்டை யூரியா விற்பனை செய்யப்படுகிறது.இதனால் மரக்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். யூரியா வழங்குவதில் பாராபட்சம் காட்டாமல் மலையக மரக்கறி உற்பத்தியாளர்களுக்கும் 10 ஆயிரம் ரூபாவிற்கு ஒரு மூட்டை யூரியா வழங்க வேண்டும். மேலும் இயற்கை அனார்த்ததால் பாதிக்கப்படும் அதாவது மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் நெல் உற்பத்தியாளர்களுக்கு வெள்ள நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் மலையகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் மரக்கறி உற்பத்தியாளர்களுக்கு வெள்ள நிவாரணங்கள் வழங்கப்படுவதில்லை. இது ஒரு பாரபட்ச செயலாகும். நம் நாட்டு மக்கள் மூன்று வேளையும் சோறு மட்டும் உண்பதில்லை, சோற்றுடன் மரக்கறிகளையும் சேர்த்து உண்ணுகிறார்கள் என்பதை நமது அரசாங்கம் மறந்துவிட கூடாது. மலையக மரக்கறிகளுக்கு பயன்படுத்தப்படும் உர வகைகள் மற்றும் மருந்து வகைகளும் அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.மலையக விவசாயிகளுக்கு பெற்றோலும் மண்ணெண்ணெய்யும் கிடைப்பதில்லை. நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு பெட்ரோலும் மண்ணெண்ணெய்யும் பர்மிட் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. ஆனால் மலையக மரக்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய்யும் பெற்றோலும் கிடைகாததால் தண்ணீர் பாய்ச்சும் இயந்திரத்தை இயக்க முடியாமல் மரக்கறிகளுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் அவஸ்த்தை படுகின்றார்கள். மலையகத்தில் உற்பத்தி செய்யயப்படும் மரக்கறிகள் இலங்கை முழுவதும் கொண்டுசெல்லப்படுகின்றன. மக்களும் மலையகத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளையே விரும்பி உண்ணுகின்றார்கள். மரக்கறிகள் இறக்குமதி செய்வதில்லை. ஆனால் அரிசி இறக்குமதி செய்யப்படுகின்றன. எனவே உள்ளூரில் உற்பத்தி செய்யும் மரக்கறி உற்பத்தியை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மலையகத்தில் நுவரெலியா, கந்தப்பளை, நானுஓயா, இராகலை, பொரகஸ், வெளிமட அக்கரப்பத்தனை உட்பட பல இடங்களில அரசாங்க தொழிலைவிட மரக்கறி உற்பத்தி தொழிலை பிரதான தொழிலாக செய்துவருகின்றனர். அதே போல பெருந்தோட்ட தொழிலாளர்களும் பெருந்தோட்டங்களில் வழங்கும் ஊதியம் போதாமையால் மேலதிக வருமானத்திற்காக மரக்கறி உற்பத்தியே பிரதான தொழிலாக செய்துவருகின்றனர். எனவே மலையகத்தில் மரக்கறி உற்பத்தியில் ஈடுப்படும் விவசாயிகளுக்கும் அரசாங்கம் சலுகைகளும் நிவாரணங்களும் வழங்கி பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# “வடக்கு- கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்”

## 89வது நாள் ஆர்ப்பாட்டம் செங்கலடி களுவன்கேணியில் முன்னெடுப்பு




(செங்கலடி நிருபர் சுபா)

“வடக்கு– கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்” எனும் தொனிப் பொருளில் நடைபெறும் 100 நாட்கள் செயல்முனைவின் 89 ஆவதுநாளான இன்று மட்டக்களப்பு – செங்கலடி களுவன்கேணி பகுதியில் இடம்பெற்றது. “வடக்கு–கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு” – ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் களுவன்கேணி பகுதியில் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

இதன்போது அங்கு திரண்டிருந்த மக்கள் “எமக்கு நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும்”, “எங்கள் நிலம் எமக்கு வேண்டும்”, “நடமாடுவது எங்கள் உரிமை”, “பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை”, “ஒன்று கூடுவது எங்கள் உரிமை”, “எங்கள் நிலங்களை அபகரிக்காதே” போன்ற பல கோரிக்கைகளை கோசங்களாக எழுப்பினர். பதாதைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்ட இவர்கள் களுவண்கேணி குளணி பொதுக்கட்டிடத்தில் இருந்து ஆர்ப்பாட்ட பேரணியாக களுவண்கேணி குளணி சந்தி வரை சென்றனர். பெண்கள் அமைப்புக்கள், காணாமல் போனோரி உறவுகள், இளைஞர்கள் என் பலர் கலந்து கொணட்டுருந்தனர்.





திருக்கோணேஸ்வரத்தில் மாதம் ஒரு வெள்ளிக்கிழமை திருவாசகம் முற்றோதல் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் இன்றய தினமும் திருவாசகமுற்றோதலில் அருளாளர்கள் ஈடுபட்டனர். அதன்படங்களைக்காணலாம்

**(பொன்ஆனந்தம் )**

நாள்தோறும் சுபீட்சம் நிகழ்நிலை பத்திரிகையை பார்வையிட
www.supeedsam.com

# அன்னமலை பிரதேச வைத்தியசாலை வைத்தியர்கள் விடுதி திறந்து வைப்பு





**நூருள் /ஹுதா உமர்.**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட அன்னமலை பிரதேச வைத்தியசாலைக்குரிய வைத்தியர்கள் விடுதி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ எல் எம் றிபாஸ் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம் பீ ஏ வாஜித், திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம் சீ எம் மாஹிர், அன்னமலை பிரதேச வைத்திய சாலையின் அபிவிருத்தி குழுவினர், பிராந்திய மருந்தாளர் திருமதி இந்திரகுமார், சுகாதார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் குழுவினரும் ஶ்ரீளுஶ்ரீ செற்றிட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற வெளிநோயாளர் பிரிவு மற்றும் ஏனைய சேவைகளுக்கான கட்டிட தொகுதியை பார்வையிட்டதுடன் அதன் மீளாய்வு பற்றியும் கேட்டறிந்து கொண்டனர். குறித்த குழுவினருடன் கலந்தாலோசனையில் ஈடுபட்ட பணிப்பாளர் எதிர்வரும் காலங்களிலும் இவ்வாறான செயற்றிட்டங்களுக்கு குறித்த வைத்தியசாலைக்கு முன்னுரிமை அடிப்படையில் சேவைகளை வழங்க உள்ளதாக தெரிவித்தார்.

மேலும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களும் வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினரும் பணிப்பாளரின் பாரபட்சமின்றிய சேவைக்கு பாராட்டுக்களை தெரிவித்ததுடன் பிரதிப் பணிப்பாளர் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி மீது கொண்டுள்ள ஆர்வத்தையையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தினர்.



# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்
# ALEEZA BEAUTY PARLOUR NUSKA NAHEEM
# அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி

அருந்ததி நிறுவனத்தின் 6வது மாற்றுமோதிரம் மணப்பெண் அலங்கார நிகழ்வு இம்முறை மட்டக்களப்பு Anjana Grand Palace இல் வெகு விமரிசையாக நடைபெற்றது. 30இற்கும் மேற்பட்ட அழகுக்கலை நிபுணர்கள் பங்குபற்றி தமது திறமைகளை வெளிக்காட்டியிருந்ததோடு கேக் வடிவமைப்பாளர்கள் தங்களால் அலங்கரிக்கப்பட்ட பலவிதமான கேக்குகளை காட்சிப்படுத்திய கேக் கண்காட்சியும் இடம்பெற்றிருந்தது. அருந்ததி நிறுவனத்தின் தலைமை நிர்வாகத்தினர் திரு சி.கலாமோகன் , கி.மேகலா தலைமையில் புத்தக புரவலர் திரு ஹாசிம் உமர் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில், பங்குபற்றிய அனைத்து அழகுக்கலை நிபுணர்களும் விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.















# சஷ்டி என்றால் ஆறு!

## உயிர் உணர்ச்சிக்குரிய ஆறு நாள் விரதம்

# கந்தனின் கந்தசஷ்டி விரதம்!

கந்தசஷ்டி என்பது முருகக் கடவுள் சூரனை அழித்த பெருமையை சைவ சமயத்தவர்கள் கொண்டாடும் ஒரு விழாவாகும்.

சஷ்டி என்றால் ஆறு ஆகும். ஐப்பசி மாதம் சுக்கிலபட்ச பிரதமை முதல் சஷ்டி ஈறாக உள்ள ஆறு நாட்களும் கந்த சஷ்டி காலமாகும். இந்த ஆறு நாளையும் சைவர்கள் விரத நாட்களாக அனுட்டிக்கின்றனர்.

அக்டோபர் 25 ஆம் தேதி தொடங்கி அக்டோபர் 30 தேதி வரை 6 நாள் ஸ்கந்த சஷ்டி திருவிழா எல்லா முருகன் கோவில்களிலும் நடைபெறுகிறது.

சஷ்டி திதி அக்டோபர் 30 ஆம் தேதி காலை தொடங்கி அக்டோபர் 31 ஆம் தேதி காலை முடிவடைகிறது.

கந்த சஷ்டி விரதம் இருந்து முருகனை வணங்கினால் வாழ்வில் நன்மைகள் கைகூடும். ஐப்பசி மாதம் அமாவாசைக்கு மறுநாள் பிரதமை தொடங்கி சஷ்டி வரை உள்ள ஆறு நாட்களும் நோன்பிருந்து கந்த சஷ்டி விரதம் கடைபிடிக்க வேண்டும். நம் வாழ்க்கையில் எவ்வளவு துன்பங்கள் ஏற்பட்டாலும், எல்லாம் நொடியில் நீங்கி, எதிரிகள் ஒழிந்து முன்னேற்றம் உண்டாக, தன்னம்பிக்கை அதிகரிக்க சஷ்டி விரதம் இருந்து முருகப்பெருமானை வணங்க வேண்டும்.

இதனை உயிர் உணர்ச்சி வளர்க்கும் விரதம் என்பார்கள். அதனால் உப்பு நீர், எலுமிச்சம் பழச்சாறு, நார்த்தம் பழச்சாறு, இளநீர் ஆகியவற்றை கந்த சஷ்டி விரதம் இருப்பவர்கள் அருந்தக்கூடாது.

அக்டோபர் 25 ஆம் தேதி தொடங்கி சூரசம்ஹாரம் வரை மிக எளிமையான சைவ உணவை கொஞ்சமாக உட்கொண்டு முருகனை நினைத்து விரதம் இருக்க வேண்டும். மதியம் ஒரே ஒரு முறை மட்டும் பச்சரிசி உணவுடன் தயிர் கொஞ்சம் சேர்த்து உண்ண வேண்டும். காலை, இரவு நேரத்தில் பால், பழங்கள் மட்டும் கொஞ்சம் சாப்பிடலாம். ஆனால், வயதானவர்கள், நோய் உள்ளவர்கள் விரதத்தின் போது உடல் நிலைக்கு தகுந்தபடி நடந்து கொள்ள விதிவிலக்குகள் உண்டு.

பிரதமை தொடங்கி சஷ்டி முடிய ஆறு நாட்களும் எதுவும் சாப்பிடாமல் விரதம் இருந்து, வள்ளி மணவாளனை பூஜை செய்பவர்களும் உண்டு. ஆறு நாட்களும் உபவாசம் இருக்க முடியாதவர்கள். சஷ்டி அன்று மட்டுமாவது எதுவும் சாப்பிடாமல் இருப்பது நல்லது.

செல்வங்கள், சுகபோகங்கள், நற்புத்திரப்



பேறு என்பவற்றை முன்னிட்டு முருகனை குலதெய்வமாகவோ, இஷ்ட தெய்வமாகவோ வழிபடுவோரும் பிறரும் இந்த விரதத்தை அனுஷ்டிப்பர். இந்த ஆறு நாட்களும் சைவர்கள் விரதமிருந்து அதிகாலையில் எழுந்து நீராடி பூரண கும்பம் வைத்து விளக்கேற்றி பூசை வழிபாடு செய்வர்.

> ''அகரமும் ஆகி அதிபனும் ஆகி
> அதிகமும் ஆகி அகமாகி
> அயன் எனவாகி அரி எனவாகி
> அரன் எனவாகி அவர் மேலாய்
> இகரமும் ஆகி எவைகளும் ஆகி
> இனிமையும் ஆகி வருவோனே
> இருநிலம் மீதில் எளியனும் வாழ
> எனது முன் ஓடி வர வேணும்
> மகபதியாகி மருவும் வலாரி மகிழ் களி
> கூரும் வடிவோனே
> வனமுறை வேடன் அருளிய பூஜை
> மகிழ் கதிர்காமம் உடையோனே
> சககெனசேகு தகுதிமித்தோதி திமியென
> ஆடும் மயிலோனே
> திருமலிவான பழமுதிர்சோலை
> மலை மிசை மேவு பெருமானே.'

தீவிர முருக பக்தர்கள் இவ்விரதத்தை ஒரு கடுந்தவமாகக் கருதி, ஆறு தினங்களும் உபவாசம் இருத்தல் வழக்கம். அமாவாசைத் தினத்தில் ஒரு வேளை உணவு உண்பர்.

இவ்விரத முறைமையை அனுசரிக்க இயலாதவர்கள் ஐந்து தினங்கள் ஒரு வேளை பால், பழம் மட்டும் அருந்தி, ஆறாம் நாள் உபவாசம் இருத்தலும் நடைமுறையாக உள்ளது. ஏழாம் நாள் பாரணை அருந்தி விரதத்தை நிறைவேற்றுவர்.

தொடக்க தினத்தில் ஆலயத்தில் தர்ப்பையணிந்து, காப்புக்கட்டல் அதாவது சங்கற்பம் செய்வது வழக்கம்.

பக்தர்கள் ஆறு தினங்களும் முருகன் ஆலயத்தில் இறைவழிபாடு, புராணபாடனம், போன்ற புனிதச் செயல்களில் ஈடுபடுவர். இறுதி நாளில் காப்பை அவிழ்த்து, தட்சணையுடன் அர்ச்சகரிடம் சமர்ப்பிக்க வேண்டும். ஏழாம் நாள் அதிகாலை நீராடி அனுஷ்டானங்களை நிறைவேற்றி, பாரணைப் பூஜை முடிந்ததும் மகேஸ்வர பூசை செய்து விரதத்தைப் பூர்த்தி செய்யலாம்.

மனிதர்களின் உட்பகையாக உள்ள காமம், வெகுளி, ஈயாமை (உலோபம்), மயக்கம், செருக்கு, பொறாமை ஆகிய அசுரப் பண்புகளை அழித்து, அவர்கள் தெய்வீக நிலையில் பெருவாழ்வு வாழ அருள் பாலிக்கும் இறைவன் ஆற்றலின் பெருமை கந்த சஷ்டி உணர்த்தும் மெய்ப்பொருள் ஆகும்.

முருகப் பெருமான் சூரசங்காரம் செய்து தேவர்களைக் காத்த அருட் செயலைக் குறிக்கும் இவ்விழாவின் ஆறாம் நாள் முருகன் ஆலயங்களில் 'சூரன் போர்' என்னும் சமய நிகழ்வு நாடக பாணியில் நடைபெறுவது வழக்கம்.



உதவிக் கல்விப்பணிப்பாளர்
வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு நிருபர்)

சூர சம்காரத்தின் முடிவில் முருகன் மாமரமாக நின்ற சூரனை தன் சக்தியாகிய வேலினால் பிளந்தார். பிளவுபட்ட மாமரம் சேவலும் மயிலுமாக மாறவும், சேவலை கொடியாகவும் மயிலை வாகனமாகவும் முருகன் ஏற்றுக்கொண்டார். இது கந்தபுராணத்தில் சொல்லப்பட்ட ஒரு நிகழ்ச்சியாகும்.

கந்தபுராணத்தில் வரும் சூரபத்மன், சிங்கமுகன், தாரகாசுரன் ஆகியோர் முறையே சைவ சித்தாந்தத்தில் பேசப்படும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களைக் குறிப்பதாகக் கருதப்படுகின்றது. ஆன்மாவைத் துன்புறுத்தும் மலங்களின் கெடுபிடியில் இருந்து ஆன்மாவுக்கு விடுதலை அளிப்பதோடு ஆணவமலத்தின் பலத்தைக் குறைத்து அதனைத் தன் காலடியில் இறைவன் வைத்திருப்பதை உணர்த்துவதே சூர சம்காரமாகும்.

ஆறுபடை வீடுகளிலும், அனைத்து முருகன் கோயில்களிலும் இந்த ஆறு நாட்களிலும் சிறப்பான பூஜைகள் நடைபெறும். ஆறு நாட்கள் தொடர்ந்து விரதம் இருப்பவர்களும், இருக்க முடியாமல் போனவர்களும் கூட மாதந்தோறும் வரும் சுக்கில பட்சத்துச் சஷ்டியில் முருகப் பெருமானை வழிபட்டு விரதம் மேற்கொள்ளலாம்.

> ''பொன்னழகு மின்னிவரும்
> வண்ணமயில் கந்தா
> கண்மலரில் தன்னருளைக் காட்டிவரும் கந்தா
> நம்பியவர் வந்தால் நெஞ்சுருகி நின்றால்
> கந்தா முருகா வருவாய் அருள்வாய்முருகா!'

மும்மலங்களை அழித்த முருகப்பெருமானின் விரதம்.

கந்தப் பெருமான் சூரனைச் சங்கரித்த பெருமையைக் கொண்டாடுவதே ஸ்கந்த சஷ்டி விரத விழாவாகும். முருகன் கோயில் கொண்டுள்ள எல்லா ஆலயங்களிலுமே ஸ்கந்தசஷ்டி விரதம் மிகச் சிறப்பாக ஆறு நாட்கள் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஐப்பசி மாதத்தில் வரும் வளர்பிறை சஷ்டி அன்றுதான் முருகப் பெருமான் சூரபத்மனை அழித்த நாள்.

இத்தகைய மகிமை மிக்க விரதத்தை அனுஷ்டித்து வாழ்வில் உய்வோமாக.

# சுற்றுலா துறையை மீழ்கட்டியெழுப்ப தற்போது சரியான தருணம் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய செயலமர்வில் தெரிவிப்பு



**ரவ்பீக் பாயிஸ்**

சுற்றுலாத்துறையை மீழக்கட்டியெழுப்பும் நோக்கில் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய செயலமர்வொன்று திருகோணமலை ஸ்வர்க்கா விடுதியில் நேற்று (27) இடம்பெற்றது. கிழக்கு மாகாண சுற்றுலா பணியகம் மற்றும் அவுஸ்திரேலிய உதவித்திட்டத்தின் கீழாக உள்ளடக்க வளர்ச்சிக்கான திறன்கள் அமைப்பினால் இது முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் கலாமதி பத்ம ராஜா பிரதம விருந்தினராக கலந்துகொண்டதோடு கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் பொது முகாமையாளர் ஞானசேகரன், சமூக சுற்றுலாத்துறை உருப்பினர்கள், விடுதி உரிமையாளர்கள், சிறு மற்றும் நடுத்தர விடுதி உரிமையாளர்கள் மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடையவர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதன் போது கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக வீழ்ச்சியடைந்த சுற்றுலாத்துறையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு எடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டது. கிழக்கு மாகாண சுற்றுலாத்துறையானது கடந்த 2020ம் ஆண்டிலிருந்து பின்னடைவை சந்தித்திருந்த போதிலும் அண்மைக்காலத்தில் அதனை கட்டியெழுப்புவதற்கு உவப்பான காலநிலை நிலவி வருவதாக கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

மேலும் நாடு சந்தித்துள்ள பின்னடைவிலிருந்து மீட்டெடுப்பதற்கு நாட்டுக்கு டொலர் அவசியம் அதனை அடைவதற்கு சுற்றுலாத்துறையானது முக்கிய பங்கு வகிப்பதாக குறிப்பிட்டார். அதனையே அரசாங்கமும் ஒரு முக்கிய விடயமாக கருத்தில்கொண்டு செயற்பட்டுவருவதாகவும் குறிப்பிட்டார்.

# போதைப்பொருள் ஒழிப்புக்கு தேவையான தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கான விசேட கூட்டம்



போதைப்பொருள் ஒழிப்புக்கு தேவையான தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கான விசேட கூட்டம் நேற்று (27) காலை திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் இடம்பெற்றது. இங்கு, போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டத்துடன், மாகாணத்திலுள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் இது தொடர்பில் தெரியப்படுத்துமாறும் ஆளுநர் அறிவுறுத்தினார். பாடசாலையிலும் பாடசாலை முடிந்ததும் போதைக்கு அடிமையாகும் மாணவர்களை எளிதில் அடையாளம்காணும்வகையில்ஆசிரியர்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்றும் ஆளுநர் கூறினார்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் மாகாண மட்டத்தில் இயங்கி வந்த போதைப்பொருள்தடுப்பு குழுக்களை மீண்டும் செயற்படுத்துமாறும் ஆளுநர் ஆலோசனை வழங்கியுள்ளார். மேலும், வலய கல்வி மட்டத்தில் தனியான போதைப்பொருள் தடுப்பு குழுக்களை நிறுவுமாறும் மாகாண கல்விச் செயலாளருக்கு ஆளுநர் ஆலோசனை வழங்கினார். மேலும், மாவட்ட மட்டத்திலும் உள்ளூராட்சி மட்டத்திலும் போதைப்பொருள் ஒழிப்பு குழுக்களை மீண்டும் செயற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். இந் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட செயலாளர் பி.எச்.என்.ஜெயவிக்ரம, ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க, மாகாண கல்வி செயலாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# கல்முனை மாநகர சபையின் புதிய பொதுவசதிகள் குழு உறுப்பினர் தெரிவு

**(பாரூக் சிஹான்)**

கல்முனை மாநகர சபையின் புதிய பொதுவசதிகள் குழு உறுப்பினராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மாநகர சபை உறுப்பினர் பிரபல அரசியல் சமூக செயற்பாட்டாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் முஹம்மது அலியார் கலீலுர் ர/ஹமான் தெரிவாகியுள்ளார். கல்முனை மாநகர சபையின் 55 ஆவது அமர்வு கடந்த புதன்கிழமை(26) மாலை இடம்பெற்ற வேளை கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் முன்னிலையில் தெரிவு செய்யப்பட்டார்.

கல்முனை மாநகர சபையின் பொதுவசதிகள் குழு உறுப்பினராக இருந்து கடந்த 2022.09.15 அன்று அமரத்துவமடைந்த ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்த கணபதிப்பிள்ளை புவனேஸ்வரியின் வெற்றிடத்திற்கு இவர் தெரிவானார். பொதுவசதிகள் குழு உறுப்பினர் வெற்றிடத்தை சபையில் மாநகர பொதுவசதிகள் குழு தவிசாளரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினருமான



ஹென்றி மகேந்திரன் சுட்டிக்காட்டி இருந்ததுடன் புதிய உறுப்பினரை தெரிவு செய்வதன் அவசியத்தை குறிப்பிட்டார். இதன் போது கல்முனை மாநகர சபையின் புதிய பொதுவசதிகள் குழு உறுப்பினராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மாநகர சபை உறுப்பினர் பிரபல அரசியல் சமூக செயற்பாட்டாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் முஹம்மது அலியார் கலீலுர் ர/ஹமான் சக கட்சி உறுப்பினரால் பிரேரிக்கப்பட்டதுடன் சபையும் ஏகமனதாக குறித்த பதவிக்கு புதிய உறுப்பினரை நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாள்தோறும் சுபீட்சம் நிகழ்நிலை
பத்திரிகையை பார்வையிட
www.supeedsam.com

# தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாட்டிற்கு சாவகச்சேரி நகரசபையில் கண்டனம்

**த.சுபேசன்**

வரலாற்றுப் பிரசித்திபெற்ற திருகோணமலை–திருக்கோணேச்சரம் ஆலயத்தின் அபிவிருத்திக்கு தொல்லியல் திணைக்களம் முட்டுக்கட்டை போடுகின்ற செயற்பாட்டினை கண்டித்து சாவகச்சேரி நகரசபையில் கண்டனப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே நகரசபை உறுப்பினர் க.கஜிதன் குறித்த கண்டனப் பிரேரணையை சபையில் முன்மொழிந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், தொல்லியல் திணைக்களம் திருக்கோணேச்சர ஆலயத்தின் அபிவிருத்தியை தடுத்து நிறுத்தியுள்ளது.தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடு மற்றும் நில அபகரிப்புச் செயற்பாடு ஆகியன இந்து மக்களை வெகுவாகப் பாதித்துள்ளது.
எமது பாரம்பரிய நிலங்கள் பறிபோகும் அபாயம் காணப்படுகிறது.எமது பாரம்பரிய நிலங்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தமிழர்களாகிய எம் அனைவருக்கும் உண்டு.எனவே தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாட்டிற்கு எதிராக நடவடிக்கை எடுத்து–தொல்லியல் திணைக்களத்தின் அடாவடியை கட்டுப்படுத்த வேண்டும். என மேலும் அவர் தெரிவித்திருந்தார். குறித்த கண்டனப் பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும், மூதூரில் போராட்டம்

**ஹஸ்பர்**

100 நாட்கள் செயல்முனைவின் 88ஆவது நாள் மக்கள் குரல் திருகோணமலை மாவட்டத்தில் இறால்குழி பிரதேசத்தில் நேற்று (27) மக்களின் கௌரவமான அரசியல் தீர்வுக்கான கோரிக்கையை முன்வைத்து கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஊர்வலமாக பதாகைகளை ஏந்தியவாறு தங்களது கோரிக்கைகளை எழுப்பினர்.



இந் 100 நாட்கள் செயல்முனைவின் 88ம் நாள் போராட்டத்தில் திருமலை பிரதேசத்தில் உள்ள பிரதேச பெண்கள், இளைஞர்கள்,விவசாயிகள்,பெண்கள் வலையமைப்பு உறுப்பினர்கள், சிறுகுழுக்களின் உங்கத்துவர்கள், ஆண்கள் மற்றும் சிவில் அமைப்புப் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

"வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" " நாங்கள் நாட்டை துண்டாடவோ, தனியரசோ கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம் " " வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும் " " 13 வது திருத்தச்சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப் பரவலாக்கத்துக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது " பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம்" எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, மத வழிபாடு எங்கள் சுதந்திரம், எமது மத தளங்களின் புனிதத்தினை கொச்சைப்படுத்தாதே, இந்து மத ஆலயங்களின் இடங்களை திட்டமிட்டு சுபீகரிக்காதே என பல கோரிக்கைகளை முன்வைத்தனர்.

எமது வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினால் வடக்கு கிழக்கு பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு நீதியுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டி முன்னெடுக்கப்படும் ஜனநாயகப் போராட்டங்களுக்கு பெரும் சவாலாக இலங்கை அரச படைப்பிரிவினரும், இலங்கை படைப்பிரிவுகளின் புலனாய்வினர்களும் செயற்படுவது ஜனநாயகத்தை குழி தோண்டி புதைக்கும் செயலாகவே நாம் கருதுவதுடன், பாதிக்கப்பட்ட மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களின் உரிமைக்கான குரல் வளையை நசிக்கும் செயலாகவே நாம் இதனை கருதுவதுடன், இவ்வாறான செயல்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அத்துடன் எமது "வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" எனும் ஜனநாயக ரீதியான மக்கள் குரலுக்கு மேன்மை தங்கிய இலங்கை சனாதிபதி அவர்கள் உதவ வேண்டும் எனவும் கோருகின்றோம் எனவும் இதன் போது கருத்து தெரிவித்தனர்.

மட்டக்களப்பில் Multi Purpose Store
(களஞ்சிய) அறை வாடகைக்கு உண்டு
களஞ்சியத்தின் விஸ்தீரணம் 1512 சதுர அடி.
நீளம் 42 அடி, அகலம் 35 அடி, உயரம் 18 அடி.
அலுவலக அறை 170 சதுர அடி.
குளியல் அறை, மலசலகூடங்கள் 02,
நீர் வசதி, மின்சார வசதி, போக்குவரத்து வசதி
(பிரதான வீதியில் அமைந்துள்ளது)

அமைவிடம்:
திருகோணமலை வீதி,
ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு.
தொடர்புகளுக்கு: whatsapp: 0041 76 345 23 95

# ரஷ்யாவுடன் கைகோர்க்கும் ஈரானின் ட்ரோன் உற்பத்தியும்




**( ரஷ்யாவுடன் வலுவாக கைகோர்க்கும் ஈரானின் ட்ரோன் தானியங்கி ஏவுகணை உற்பத்தியால் உக்ரேனிய போர்க்களத்தில் ரஷ்யாவை தோற்கடிக்க முடியாதோ என்று அமெரிக்கா அஞ்சுகிற வேளையில், அதேவேளை ஈரானின் அணு சக்தி வளர்ச்சியால் பிராந்திய வல்லரசாக ஈரான் அணு ஆயுத பலம் பெற்றால் அமெரிக்கவின் வளைகுடா இராணுவ மேலாண்மை குறைக்கப்படும் என வாஷிங்டன் ஐயமுறுகிறதோ என்பது பற்றிய ஆய்கிறது இக்கட்டுரை)**

## அமெரிக்காவை அச்சுறுத்தும் ஈரானின் அணு சக்தி வளர்ச்சியும்

2000 களில், ஈரானின் யுரேனியம் செறிவூட்டல் திட்டத்தின் வெளிப்பாடானது சமாதானமற்ற பயன்பாடுகளுக்கு இது நோக்கமாக இருக்கலாம் என்று அமெரிக்காவால் குற்றம் சாட்டப்பட்டது.

வாஷிங்டன் சார்பான ஈரானிய அதிருப்தி குழு ஈரானினால் மேற்கொள்ளப்பட்ட வரையறுக்கப்படாத அணுசக்தி நடவடிக்கைகளை குற்றம் சாட்டிய பின்னர் 2003 ஆம் ஆண்டில் ஐஅஉஅ விசாரணை நடத்தப்பட்டது.

ஈரான் மேற்கொண்டுள்ள அணுசக்தி ஒப்பந்தத்தை தக்கவைப்பதற்காக பல மாதங்களாக நடைபெற்று வந்த பேச்சுவார்த்தையில் சுமுகத் தீர்வு நெருங்கிவிட்டாலும், அணு சக்தி ஒப்பந்தத்தை தக்கவைப்பதற்கான பேச்சுவார்த்தையில், ஈரானிடம் சில அம்சங்களை ஐரோப்பிய யூனியன் பரிந்துரைத்திருந்தது. அதற்கு பதிலளித்து ஈரானும் தனது நிலைப்பாட்டை தெரிவித்துவிட்டது. அதனை மேற்கத்திய நாடுகளும் ஏற்றுக்கொண்டுவிட்டன.

அதையடுத்து, அமெரிக்க டொனால்ட் ட்ரம்ப் அரசு அந்த ஒப்பந்தத்தை முறியடித்ததால் இந்த விவகாரத்தில் சுமுகத் தீர்வு ஏற்பட வாய்ப்பு நெருங்கவில்லை. இதன் விளைவே இன்றைய உலகின் முக்கிய விடயமாக ஈரானிய ட்ரோன் தயாரிப்பும், ரஷ்யா- ஈரான் ஆழமான உறவு பற்றி அமெரிக்கா அதீத கவனம் செலுத்த தொடங்கியுள்ளது.

### உக்ரேனில் ஈரான் ட்ரோன் தாக்குதல் :

உக்ரைன் தலைநகரில் இருவாரத்திற்கு முன் நடத்தப்பட்ட தாக்குதலில் ஈரானிய ஆளில்லா விமானங்கள் (Drones) பயன்படுத்தப்பட்டதாக அமெரிக்கவும், உகரேனிய அரசும் தெரிவித்தன.

இதற்கு முன் ஈரான் ரஷ்யாவிற்கு மேற்பரப்பிலிருந்து மேற்பரப்பு ஷாஹத்-136 உள்ளிட்ட ஏவுகணை- ட்ரோன்களை வழங்கியது.

அத்துடன் ஈரானின் சக்திவாய்ந்த புரட்சிகர காவலர்களின் இரண்டு மூத்த அதிகாரிகள் மற்றும் உச்ச தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் அதிகாரி ஆகியோர் ஆயுதங்களை வழங்குவது பற்றி ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக மாஸ்கோவிற்கு வருகை தந்தபோது ஒரு ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஈரானுக்கும் ரஷ்யாவிற்கும் இடையே சேரால்ஃபகர் உட்பட குறுகிய தூர ஏவுகணைகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஈரான் வழங்க ஒப்புக்கொண்ட ட்ரோன்களில் ஒன்று ஷாஹெட்-136 ஆகும், இது டெல்டா-சிறகுகள் கொண்ட ஆயுதம் காமிகேஸ் ஆகாயத்திலிருந்து மேற்பரப்பு தாக்குதல் விமானமாகப் பயன்படுத்தப்படுகிறது.

### ரஷ்யா-ஈரான் உறவு ;

ரஷ்யா-ஈரான் இடையேயான உறவு என்பது ஆழ்ந்த கொள்கை பிடிப்பு அடிப்படையிலானது என்பதை விட, சூழ்நிலைகளை சார்ந்தே அமைந்துள்ளது. சிரியா போரிலும், இஸ்ரேலுடனான ரஷ்ய உறவுகளும் ஈரான் வேறுபட்ட நிலைப்பாட்டை கொண்டுள்ளது. ஆயினும் தற்போதய உக்ரேனிய போரில் ரஷ்யாவிற்கு குறுகிய தூர ஏவுகணைகளை ஈரான்வழங்குகிறது.

அத்துடன் Fateh&110 மற்றும் Zolfaghar ஆகியவை 300 கிமீ முதல் 700 கிமீ (186 மற்றும் 435 மைல்கள்) தொலைவில் உள்ள இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்ட ஈரானிய குறுகிய தூர மேற்பரப்பு முதல் மேற்பரப்பு வரையிலான பாலிஸ்டிக் ஏவுகணைகள் ஆகும்.

சமீபத்திய வாரங்களில் ஈரானில் தயாரிக்கப்பட்ட ஷாஹெட்-136 ட்ரோன்களைப் பயன்படுத்தி ரஷ்ய தாக்குதல்களை உக்ரைன் தலைநகர் கீவ்வில் நடாத்தியது. ஆயினும் கிரெம்ளின் அதன் படைகள் ஈரானிய ஆளில்லா விமானங்களை உக்ரேனைத் தாக்க பயன்படுத்தியதை மறுத்தது.

ஈரானிய ட்ரோன்களால் உக்ரேனிய அரசை அச்சத்தை ஏற்படுத்தும் வகையிலும், உக்ரேனின் மின்சாரம் தயாரிக்கும் மற்றும் விநியோகிக்கும் கட்டமைப்பின் மீது தாக்குதல் தீவிரமாக நடத்தாப்பட்டது.

### ஈரான் அணுசக்தி திட்டம் :

தற்போது அமெரிக்காவை அச்சுறுத்தும் ஈரானின் அணுசக்தி திட்டம் (Nuclear program of



Iran) என்பது பல ஆராய்ச்சி தளங்கள், இரண்டு யுரேனியம் சுரங்கங்கள், ஒரு ஆராய்ச்சி அணு உலை மற்றும் மூன்று அறியப்பட்ட யுரேனிய செறிவூட்டல் நிலையங்கள் உள்ளிட்ட யுரேனியம் செயலாக்க வசதிகள் ஆகியவற்றை கொண்டது ஆகும்.

சர்வதேச அணுசக்தி அமைப்பின் (IAEA) சரிபார்ப்புக்கு உட்பட்டு அதன் அணுசக்தித் திட்டத்தை உருவாக்கியது. 1970 ஆம் ஆண்டில் ஈரான் அணு ஆயுத பரவல் தடை உடன்படிக்கையை ஒப்புக்கொண்டது.

அமெரிக்காவின் உதவியுடன் 1950 களில் சமாதான திட்டத்திற்கான அணுக்களின் பகுதியாக ஈரானின் அணுசக்தி திட்டம் பல ஆராய்ச்சி தொடங்கப்பட்டது. இதில் இரண்டு யுரேனியம் சுரங்கங்கள், ஒரு ஆராய்ச்சி அணுசக்தி மற்றும் யுரேனியம் செயலாக்க வசதிகள் ஆகியவை அடங்கும், இதில் மூன்று அறியப்பட்ட யுரேனிய செறிவூட்டல் நிலையங்கள் உள்ளன.

### அமெரிக்க உதவி பெற்ற ஈரான் :

ஈரான் அணுசக்தி திட்டத்தில் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய ஐரோப்பிய அரசாங்கங்களின் பங்கு ஈரானின் ஷாவை கவிழ்த்த 1979 ஈரானிய புரட்சி வரை தொடர்ந்தது.

1979 புரட்சிக்குப் பின், ஈரானுடனான சர்வதேச அணுசக்தி ஒத்துழைப்பு மிகக் குறைக்கப்பட்டது.

1981 ல் ஈரானிய அதிகாரிகள் நாட்டின் அணுசக்தி வளர்ச்சி தொடர வேண்டும் என்று முடிவு செய்தனர். 1980 களின் பிற்பகுதியிலும், 1990 களின் முற்பகுதியில் அர்ஜென்டினாவிலும் பேச்சுவார்த்தைகள் பிரான்சுடன் நடந்தது, மேலும் உடன்பாடுகள் எட்டப்பட்டன.

1990 களில் ரஷ்யா ஈரானுடனான கூட்டு ஆராய்ச்சி அமைப்பு ஒன்றை உருவாக்கியது, ஈரான் ரஷ்ய அணு வல்லுநர்கள் மற்றும் தொழில்நுட்ப தகவலுடன் ஈரானுக்கு அளித்தது.

பின்னர் 2006 இல், ஈரானின் மீககூ கடமைகளுடன் இணங்காததன் காரணமாக, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் ஈரான் அதன் செறிவூட்டல் திட்டங்களை நிறுத்தி வைக்குமாறு கோரியது.

### ரஷ்ய பொறியியல் ஒப்பந்தம் :

2007 ஆம் ஆண்டில், 2003 ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தில் ஈரான் ஒரு தீவிர அணு ஆயுதத் திட்டத்தை செயல்படுத்திவிட்டதாக ஐக்கிய நாடுகளின் தேசிய புலனாய்வு மதிப்பீடு அறிவித்தது.

நவம்பர் 2011 இல், ஐ.ஏ.ஏ.ஏ 2003 வரை ஒரு அணு குண்டு தயாரிப்பதற்காக ஈரான் சோதனைகளை நடத்தி வருவதாக நம்பகமான ஆதாரங்களை வெளியிட்டது, அந்த ஆய்வு பின்னர் அந்த நேரத்தில் ஒரு சிறிய அளவிலான ஆய்வு தொடர்ந்தது.

ஈரானின் முதல் அணுசக்தி ஆலை, புஷெர் 1 அணு உலை, ரஷ்ய அரசாங்க நிறுவனமான ரோசாம்மின் பிரதான உதவியுடன் நிறைவு செய்யப்பட்டு 2011 செப்டம்பர் 12 ஆம் தேதி அதிகாரப்பூர்வமாக திறக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டின் இறுதியில் புஷெர் அணு சக்தி நிலையம் முழு திறனை அடைந்துவிடும் என்று ரஷ்ய பொறியியல் ஒப்பந்தம் ஆட்டம்நெர்கோபிராம் தெரிவித்தது.

2015 ஆம் ஆண்டுக்குள், ஈரான் அணுசக்தி திட்டம் இழந்த எண்ணெய் வருவாயில் 100 பில்லியன் செலவழித்து, சர்வதேசதடைகள் ( 500 பில்லியன், மற்ற வாய்ப்பு செலவுகள் உட்பட) காரணமாக வெளிநாட்டு நேரடி முதலீட்டை இழந்தது.

தொடர்ந்து முன்னேறிய தெஹ்ரானிய அரசு 2018ஆம் ஆண்டில் டிரம்ப் நிர்வாகத்தால் ஈரானில் அணுசக்தி தொடர்பான தடைகள் மீண்டும் அமலாக்கப்பட்டது. தொடர்ந்து பல தடைகளை தாண்டி ஈரான் புதிய 360 மெகாவாட் அணுசக்தி ஆலையில் டார்கோவினில் அமைக்கும் பணியில் ஈடுபடுவதாகவும் அறிவித்துள்ளது, எதிர்காலத்தில் மேலும் நடுத்தர அணுசக்தி நிலையங்கள் மற்றும் யூரேனிய சுரங்கங்களை இது தேடுகிறது.

ஈரானின் அணு சக்தி வளர்ச்சியை அமெரிக்கா தனக்கு அச்சுறுத்தலாகவும், பிராந்திய வல்லரசாக ஈரான் அணு ஆயுத பலம் பெற்றால் அமெரிக்கவின் வளைகுடா இராணுவ மேலாண்மை குறைக்கப்படும் என வாஷிங்டன் கருதுகிறது.

இதே வேளை ரஷ்யாவுடன் ஆழமாக கைகோர்க்கும் ஈரானின் ட்ரோன் தானியங்கி ஏவுகணை உற்பத்தியால்

ஐரோப்பிய - உக்ரேனிய போர்க்களத்தில் ரஷ்யாவை தோற்கடிக்க முடியாதோ என்றும் அமெரிக்கா அஞ்சுகிறது.

ஐங்கரன் விக்கினேஸ்வரா



# கல்முனை பிரதேச செயலாளருக்கு மாநகர சபையில் மருதமுனை மக்களின் சார்பாக நன்றி தெரிவிப்பு



**(பாரூக் சிஹான்)**

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலிக்கு கல்முனை மாநகர சபையில் மருதமுனை மக்களின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது. கல்முனை மாநகர சபையின் 55 ஆவது அமர்வு கடந்த புதன்கிழமை(26) மாலை கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்றிருந்தது.

இதன் போது விசேட உரை ஒன்றினை நிகழ்த்திய கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.ஆர் அமீர்(ஜே.பி) கடந்த கால அமர்வுகளில் மருதமுனை மேட்டுவட்டை பகுதியில் மையவாடி அமைக்க கல்முனை மாநகர சபையில் தீர்மானம் மேற்கொண்டிருந்தோம். மருதமுனை பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தினால் வீடு வாசல்களை இழந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக மேட்டுவட்டை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வீட்டுத்திட்டங்களில் குடியிருக்கும் மக்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்காக மையவாடி இன்மையினால் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக சக உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சகல தரப்பினரதும் ஒத்துழைப்பினை கோரி இருந்தோம். இதற்கமைய இவ்விடயம் தொடர்பிலான பிரேரணையை சக மாநகர சபை உறுப்பினர் எம்.எஸ்.உமர் அலி சமர்ப்பித்திருந்துடன் நான் இதனை வழிமொழிந்து உரையாற்றி இருந்தேன். குறித்த சுனாமி வீட்டுத்திட்டங்களில் வாழ்கின்ற மக்களின் நீண்ட காலத் தேவையாக இருந்து வருகின்ற மையவாடியை அவர்களது நலன்களை கருத்தில் கொண்டு அப்பகுதியிலேயே ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமாகுமென இதன்போது வலியுறுத்தி கல்முனை மாநகர சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டு கல்முனை பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது.

இந்த விடயத்தை உடனடியாக கவனமெடுத்து குறித்த மையவாடிக்கான 3 ஏக்கர் காணியை பெற நடவடிக்கை மேற்கொண்ட கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலிக்கு மருதமுனை மக்கள் சார்பாக நன்றிகளை தெரிவிப்பதுடன் குறித்த மையவாடிக்கான அடிக்கல் நாட்டும் வைபவமும் மிக விரைவில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது என்றார்.

# மன அழுத்த முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு



**ஹஸ்பர்[6]**

திருகோணமலை,மூதூரிலுள்ள 12 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள பெண்கள் குழுக்களின் பொறுப்பாளர்களிற்கான " மன அழுத்தத்தை முகாமை செய்தல்" தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு மூதூர் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நேற்று27)இடம்பெற்றது. இந் நிகழ்வில் கிண்ணியா தளவைத்தியசாலையின் உளநலப்பிரிவிற்கு பொறுப்பான வைத்தியர்.ஏ.கே.எம். நஸ்மி அவர்கள் வளவாளராக கலந்துகொண்டு விரிவுரையாற்றினார். இதன் போது உளநலத்தின் முக்கியத்துவம், போதைப்பொருள் விழிப்புணர்வு மற்றும்பெண்களுக்கெதிரானவன்முறை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இந்நிகழ்வை சமூக வளர்ச்சி மற்றும் அமைதிக்கான மையம் சிறப்பாக ஒழுங்குசெய்திருந்தது.

# கோயில் ஒன்றில் ஏற்பட்ட பிணக்கு - நீதி கேட்டு நற்பிட்டிமுனை கிராம மக்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் தஞ்சம்



**பாறுக் ஷிஹான்**

கோயில் ஒன்றில் ஏற்பட்ட பிணக்கு ஒன்றினை அடுத்து நீதி கேட்டு நற்பிட்டிமுனை கிராம மக்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் தஞ்சமடைந்துள்ளனர். அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட கோயில் ஒன்றில் கடந்த மாதம் ஏற்பட்ட பிணக்கு ஒன்றினை அடுத்து இரு ஊர் மக்கள் மோதல் சம்பவத்தில் ஈடுபட்டிருந்ததுடன் பலரும் காயமடைந்த நிலையில் அப்பகுதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இம்மோதல் காரணமாக கல்முனை மாநகர சபை எல்லைக்குப்பட்ட நற்பிட்டிமுனை சேனைக்குடியிருப்பு என்ற இரு ஊர்கள் பிளவு பட்டதுடன் சமூக ஊடகங்களில் பல்வேறு விமர்சனங்களும் வெளியாகி இருந்தன. இதனை அடுத்து குறித்த கோயில் மோதலில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டு பலரும் கைதாகி சிலர் விளக்கமறிலில் வைக்கப்பட்டுள்ளதுடன் இன்னும் பலர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் குறித்த மோதலில் ஈடுபட்டவர்கள் என தெரிவிக்கப்பட்டவர்கள் தற்போது தலைமறைவாகி உள்ள நிலையில் கல்முனை பொலிஸாரும் அவர்களை கைது செய்வதற்காக நடவடிக்கை எடுத்துள்ளனர்.இது தவிர மனித உரிமை ஆணைக்குழுவும் குறித்த மோதலில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

இவ்வாறான நிலையில் இக்கோயிலில் ஏற்பட்ட மோதலில் எதிரொலியாக தமக்கு நீதியை பெறுவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக கூறி நற்பிட்டிமுனை மக்கள் நேற்று(27) நற்பிட்டிமுனை பகுதியில் அமைந்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு காரியாலயத்தில் தஞ்சமடைந்து கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸிடம் மகஜர் ஒன்றினை கையளித்துள்ளனர்.

இம்மகஜரில் வருடாவருடம் நடைபெறும் காளி கோயில் சடங்கில் ஏற்பட்ட மோதலில் காயமடைந்து எங்கள் தரப்பினரும் உள்ளனர்.எனினும் இதுவரை அவர்களுக்கான நீதி பெற்றுக்கொடுக்கப்படவில்லை. முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டும் பொலிஸ் தரப்பில் எமக்கு தீர்வுகள் கிடைக்கப்பெறவில்லை.எனினும் இதற்கு மாறாக பொலிஸ் தரப்பினரால் எமது இளைஞர்கள் யுவதிகள் என கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது.குறிப்பாக கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் என்பவர் எங்களுக்கு நீதி கிடைப்பதில் தடையாக இருக்கின்றார். எனவே இவ்விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் இவ்விடயம் குறித்து நடவடிக்கை ஏலவே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் எனவே சமூகப்பிரச்சினைகளை இரு சம்பந்தப்பட்ட தரப்பினரும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகளை பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

பின்னர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு காரியாலயத்திற்கு ஊர்வலகமாக சென்ற நற்பிட்டிமுனை பொதுமக்கள் ஊடகங்களுக்கும் கருத்துக்களை முன்வைத்தனர்.

# மெதிரியகிரியவில் பாடசாலை கட்டிடம் திறந்து வைப்பு



**எப்.முபாரக்**

மெதிரிகிரிய பௌத்த நிலையத்தின் தலைவர் வணக்கத்திற்குரிய அசாஜி சுவாமினு அவர்களின் தனிப்பட்ட நன்கொடையில் நேற்று மாலை (27) பெரமடுவ கல்லூரிக்கு புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 100 பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை சீருடை மற்றும் காலணிகள் வழங்கும் நிகழ்வு விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அலுவல்கள் நீர்ப்பாசன அலுவல்கள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க மற்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் திரு.கபில அத்துகோரள தலைமையில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

நீண்டகால தேவையாக இருந்த இப்பாடசாலை கட்டிடம் நிர்மாணிக்கப் பட்டமைக்கு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் நன்றி தெரிவித்தனர்.சமூக நலன் நாட்டிற்கு எடுத்துக்காட்டாகும்.

இங்கு பேரமடுவ கல்லூரியின் விளையாட்டு மைதானத்தை புனரமைத்து பாடசாலைக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்குமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்க அதிபர் உட்பட ஆசிரியர்கள் விளையாட்டுத்துறை அமைச்சரிடம்கோரிக்கைவிடுத்தனர். மகாவலிஅமைச்சினால் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு இயந்திர உபகரணங்களை வழங்கி பெற்றோர்களின் அனுசரணையுடன் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதாகவும், விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு 10 இலட்சம் ரூபாவை விளையாட்டு நிதியினால் வழங்குவதாகவும் கௌரவ அமைச்சர் தெரிவித்தார். ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

அத்துடன், கந்தளாய் பிரதேசத்திலுள்ள பெரமடுவ, சீனிபுர ஆகிய கிராமங்களை மகாவலி அதிகார சபையின் கீழ் பெற்றுக் கொண்டு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு கந்தளாய் பிரதேசத்திலுள்ள வண்டல் மண் நிரம்பிய குளங்களை புனரமைக்குமாறு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் திரு.கபில அத்துகோரல கோரிக்கை விடுத்தார். .

இதன்போது மெதிரிகிரி பௌத்த நிலையத்தின் தலைவர் மற்றும் கந்தளாய் பிராந்திய கல்விப் பணிப்பாளர் தர்மகீர்த்தி, அதிபர் பி.டபிள்யூ.எஸ்.எச். விக்கிரமசிங்க, மகாவலினு பிராந்திய வதிவிட அதிகாரி திரு.ஹேமந்த மற்றும் ஏனைய அதிகாரிகள் மற்றும் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

# நிந்தவூர் பிரதேச சபை அமர்வில் முஷாரப் எம்.பிக்கு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றம்

**நூருல் /ஹுதா உமர்**

நிந்தவூர் பிரதேச சபையின் 55 ஆவது சபை அமர்வு (27) நிந்தவூர் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தவிசாளர் எம்.ஏ.எம். அஸ்ரப் தாஹிர் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது சபையின் வழமையான நடவடிக்கைகளை தொடர்ந்து சபையின் உறுப்பினர் திருமதி. சுதாமதி திருகோணமலைதிருக்கோனேஸ்வரர்ஆலையத்தின்புராதன அடையாளங்களைப் பாதுகாப்பது மற்றும் ஆலையத்தின் அபிவிருத்தி செயற்பாடுகள் போன்ற விடையங்களை முடக்கும் வகையிலான செயற்பாடுகள் திட்டமிட்ட பேரினவாத குழுக்களினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையை கண்டித்து கண்டனப் பிரேரனையொன்று சபையில் முன்வைக்கப்பட்டதை தொடர்ந்து குறித்த பிரேரனையின் பிரகாரம் கண்டத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

அதே போல நிந்தவூர் பிரதேசத்தில் இடம்பெற்று வருகின்ற கடலரிப்பினை தடுப்பதற்கான நிரந்தர தீர்வு நோக்கிய நகர்வில் கட்சி பேதங்களின்றி நிந்தவூர் பிரதேச சபை செயற்பட்டுவருகின்ற இந்த சந்தர்ப்பத்தில் நிந்தவூர் பிரதேச சபையின் உதவித் தவிசாளர் தான் சார்ந்த அரசிடம் முன்வைத்த கோரிக்கையின் பிரகாரம் முதற்கட்டமாக 65 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான விலைமனுவும் பத்திரிகைகளில் கோரப்பட்டுள்ளது. இந்த விடையத்தை தான் செய்ததாக அம்பாரை மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் முஷர்ரப் முதுநபீன் முற்றிலும் பொய்யான வதந்திகளை சமூகவலைத்தள ஊடகங்களில் பரப்புவதை சபை வன்மையாக கண்டித்ததுடன் அவருக்கு எதிராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் சிறி லங்கா சுதந்திர கட்சி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்களினால் ஏகமனதாக கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருந்தது.

# கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு இரு விருது





**பைஷல் இஸ்மாயில் -**

2020 ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் விழாவில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு இரு விருதுகள் கிடைக்கப்பெற்றது. வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் வந்துலசேன தலைமையில் இடம்பெற்ற இவ்விழா, கிளிநொச்சி மாவட்ட திறன்விருத்தி நிலைய கூட்ட மண்டபத்தில் நேற்று (27) இடம்பெற்றது. இதில் வட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல அரச நிறுவனங்கள் விருதுகளைப் பெற்றுக்கொண்டது.

கடந்த 2020 ஆம் ஆண்டு வட கிழக்கு மாகாணங்களிலுள்ள அரச நிறுவனங்களில் நடாத்தப்பட்ட தேசிய உற்பத்தித்திறனில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களுக்கான விருதுகள் கொரோனா தொற்றுக் காரணமாக பிற்போடப்பட்டு நேற்றயதினம் இடம்பெற்றது. இதன்போது, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு இரு விருதுகள் கிடைக்கப்பெற்றது.மட்டக்களப்பு – புதுக்குடியிருப்பு தள ஆயுள்வேத சித்த வைத்தியசாலைக்கு விசேட திறமைச் சான்றிதழுடன் விருதும், மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்துக்கு திறமைச் சான்றிதழும் கிடைக்கப்பெற்றன. இவ்விருதுகளை கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர் மற்றும் புதுக்குடியிருப்பு தள ஆயுள்வேத சித்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் (திருமதி) ஜே.பாஸ்கரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.